முருகப்பெருமான் துணை

**மகான் பிடிநாகீசர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**25.12.2022**, ஞாயிற்றுக்கிழமை

1. அவதார ஞான வள்ளலே
அண்ணலே ஆறுமுக அரங்கனே
புவனமதில் உன் பெருமை கூறி
புகலுவேன் அனுகூல ஆசி
2. ஆசிதனை சுபகிருது சிலைதிங்கள்
அறிவிப்பேன் தசதிகதி கதிர்வாரம்
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 10 ம் நாள் 25.12.2022, ஞாயிற்றுக்கிழமை)
பேசிட பிடிநாகீசர் யானும்
பேருலகம் நன்மைபெற வேண்டி
3. வேண்டியே கலியுக மக்கள்
விடாது ஞானிகள் பூசையில்
தொண்டென அரங்கனுடன் சேர்ந்து
தொடர்ந்து கலந்து சேவை ஆற்ற
4. ஆற்றவே மக்களிடை மாற்றம்
அரங்கமகான் தவபலமாக
மாற்றம் நடந்து தேற்றமும்
மகான்களாக்க உண்டான வண்ணம்
5. வண்ணமுடன் நிலைகள் உயரும்
வரமென மேன்மை கூடி
எண்ணமெலாம் ஞானசித்தியாகி
இவ்வுலகினில் ஞானியர் படை பெருகும்
6. பெருகவே உண்மைபட சேவை
பேருலகை காக்கும் வண்ணம்
வருமுலகில் தருமம் ஆற்றுகின்ற
வல்லமை கொண்ட மக்கள் அனைவரும்
7. அனைவரும் அடையாளம் கண்டு
அரங்கன் அவதார நோக்கம்
துணைபட இவர்கள் இணைய
தேற்றம் காணும் சடுதி உலகினில்
8. உலகினில் எங்கும் அரங்கன்
உயர் ஆசிபெற்ற மக்கள்
உலகமாற்ற சேவை ஆகவே
உயர் தருமம் செய்துவர
9. வருகவே தருமத்தின் வழியே
வையகம் காக்கும் சக்தி
பெருமளவில் பெருகி மாற்றம்
பேருலகமே தருமபலம் காணும்

10. காணவே ஞானவான்கள் எனும்
கட்டமைப்பு சிறந்து நன்கு
ஞானவான்கள் தலைமை உருவாகி
ஞானிகள் ஆட்சி உருவாகும்

11. ஆகவே அரங்கன் ஆசிபெற்ற
ஆறுமுகனார் தலைமை ஏற்ற
மிகையான ஞான ஆட்சியாக
முருகப்பெருமான் அனுகூலமாக நடக்கும்
அனுகூல ஆசி முற்றே

—சுபம்—